பேலியகொட நகர சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேலியகொட நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பேலியகொட நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

	உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தின் பந்தி 2.5 இன் படி நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 66,219,485 தொகை மீளாய்வாண்டின் வருமானம் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	முத்திரை அட்டவணைகள் தயாரிக்கப்படுகின்ற அண்மித்த ஆண்டுகளுக்குரிய வருமானம் மீளாய்வாண்டிற்குரிய வருமானம் என கணிக்கப்படுகின்றது என.	நியமத்தின் படி செயற்பட வேண்டும்.
(ஆ)	நியமத்தின் அத்தியாயம் 3 பந்தி 3.29 இன் படி காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுத் தொழிற்பாடுகளின் படி நிலையான சொத்துக்கள் அப்புறப்படுத்தியதன் மூலம் கிடைத்திருந்த ரூபா 712,070 இற்கான தொகை சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.	அடுத்த கணக்காண்டில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	நியமத்தின் படி செயற்பட வேண்டும்.

(இ)	நியமத்தின் அத்தியாயம் 3 பந்தி 3.6 இன் படி நடைமுறை நிதிககூற்றுக்களில் மீளாய்வு காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்து பெறுமதிகளுக்குமாக ஒப்பீட்டு ரீதியாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒப்பீட்டு ரீதியாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	அடுத்த நிதியாண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றில் சமப்படுத்தப்பட்ட தகவல்கள் உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	நியமத்தின் படி செயற்பட வேண்டும்.
(ஈ)	நியமத்தின் அத்தியாயம் 3 பந்தி 3.32 இன் படி காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் தேறிய காசுப்பாய்ச்சலை கணிக்கும் போது பெற வேண்டிய ஊழியர் கடன் வித்தியாசம் ரூபா 719,603 தொகை சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.	அடுத்த கணக்காண்டில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	நியமத்தின் படி செயற்பட வேண்டும்.
(உ)	நியமத்தின் அத்தியாயம் 3 பந்தி 3.7 இன் படி நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்காக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை மூலதனம் மற்றும் காசுப்பாய்ச்சலில் மாற்றங்கள் என காணப்படுவதால் அந்த கூற்றுக்களுடன் பாதீட்டுத் தகவல்கள் ஒப்பீட்டு ரீதியாக சமர்ப்பிக்க முடியாது என.	நியமத்தின் படி செயற்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றுதல்கள் ரூபா 682,215 தொகை வருமானமென இனங்கண்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மிகை அந்தப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.	இவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும்.

1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள 09 கணக்கு மீதிகள் நிதிக்கூற்றுக்களின் படி மீதி மற்றும் அட்டவணைகளின் படி மீதிகளின் இடையே ரூபா 9,117,873 இற்கான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.	இணக்கமின்மையை விரைவாக கண்டறிந்து அட்டவணைகள் மற்றும் கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	அட்டவணைகள் நாளதுவரையாக பேணப்பட்டு அதன்படி நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களின் படி கூட்டுத்தொகை ரூபா 7,951,510 தொகைக்கான 05 கணக்கு விடயங்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக அட்டவணைகள், காலப்பகுப்பாய்வுகள் மற்றும் நாட்குறிப்பு உறுதிப்பத்திரங்கள் சமர்ப்பித்திருக்காமையால் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாமல் இருந்தது.	அடுத்த கணக்காண்டு இறுதிக் கணக்குகளுடன் அனைத்து சாட்சிகளும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நி.பி. 571	02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 10,096,418 இற்கான வைப்புக்கள் ஆதனவழிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.	ஆதனவழிப்புச் செய்யப்படாத 02 வருடங்களுக்கு மிகையான வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஆ)	அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 2.6.1(அ)(I)	இயன்றளவு குறைந்த காலப்பகுதி ஒன்றில் ஒப்பந்த வேலைகள் வழங்குதலுக்காக பெறுகை நேரசூசி தொடர்பாக பெறுகைக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டு இணக்கஞ் செய்வதற்கு தொழிநுட்பக் குழுவின் அங்கத்தவர்கள் கூட்டாக/ தனியாகவும் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 52.9 மில்லியனுக்கான 07 நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகள் தொடர்பாக அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.	பெறுகை நேரசூசியில் குறிப்பிடப்பட்டுள்ள நிச்சயிக்கப்பட்ட நாட்களில் பெறுகை அலுவல்கள் பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் போகின்றது என.	பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 23,433,605 தொகை காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 38,021,625 தொகை காணப்பட்டது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கு தொடர்பாக 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசேட்டின் படி மீதி மற்றும் வங்கிக் கணக்கின் படி மீதியிடையே ரூபா 40,250 இற்கான இணக்கமின்மையொன்று காணப்பட்டது. 1987 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 250 இற்கான சிறுகாசு மற்றும் ரூபா 40,000 இற்கான நிலையான வைப்பு வட்டியும் இதில் அடங்குவதுடன் 37 வருடங்களாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	இந்த இணக்கமின்மையை தீர்த்துக் கொள்வதற்கு இயலுமையொன்று காணப்படவில்லை என.	இணக்கஞ் செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.3 வருமான நிருவாகம்

2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம் 000'	சிட்டையிடப்பட்ட வருமானம் 000'	சேகரிக்கப்பட்ட வருமானம் 000'	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை 000'	மதிப்பீட்டு வருமானம் 000'	சிட்டையிடப்பட்ட வருமானம் 000'	சேகரிக்கப்பட்ட வருமானம் 000'	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை 000'
வீதவரி மற்றும் வரி	91,050	77,796	76,677	26,946	51,010	48,332	46,145	21,750
வாடகை	7,894	3,333	5,145	458	5,685	2,197	4,415	2,265
அனுமதிப்பத்திரக் கட்டணம்	3,785	2,010	3,702	40	3,700	2,010	4,051	63
ஏனைய வருமானங்கள்	41,825	-	79,517	-	24,746	-	39,466	-
மொத்தம்	**144,554**	**83,139**	**165,041**	**27,444**	**85,141**	**52,539**	**94,077**	**24,078**

2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலுவை வீதவரி வருமானத்தில் நடைமுறை ஆண்டிற்குரிய 875 அலகுகளில் ரூபா 3,701,253 தொகையும் 1 வருடத்திற்கும் 3 இற்கும் இடைப்பட்ட 3,584 அலகுகளில் இருந்து ரூபா 12,523,328 தொகையும் 3 வருடங்களுக்கும் 5 இற்கும் இடைப்பட்ட 465 அலகுகளில் இருந்து ரூபா 3,083,081 தொகையும், 5 வருடங்களுக்கும் 10 இற்கும் இடைப்பட்ட 458 அலகுகளில் இருந்து ரூபா 4,038,476 தொகையும் 10 வருடங்கள் மிகையான 272 அலகுகளில் இருந்து ரூபா 3,574,820 தொகையும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.	நிலுவை வீதவரியில் 2024 ஆண்டிற்குரிய 5,654 அலகுகளுக்காக ரூபா 26,920,958 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், அவற்றில் 2025 மே 20 திகதியில் உள்ளவாறு ரூபா 7,689,065 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது என.	நிலுவை வீதவரி விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வேண்டுகோள் ஒன்றின் படி ஸ்ரீ ஜயதிலகாராமய புரான மஹா விஹாரையில் முற்றப்பகுதி தார் பூசி அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 315,000 தொகைக்கான மதிப்பீடொன்றின் மீது 2024 செப்தெம்பர் 30 திகதி ஒரு மாத காலத்தினுள் பூர்த்தி செய்து தருவதற்காக ரூபா 290,342 இற்கான உடன்பட்ட பெறுமதிக்கு பெண்கள் விவசாய அமைப்பொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. மேல் மாகாண ஆளுனரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 2024 ஒக்தோபர் 07 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 292,282 தொகை சபை நிதியத்திடமிருந்து செலவிடப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் இவ்வாறான செயற்திட்டங்கள் தொடர்பாக சரியாக கடைபிடித்து ஆளுனரின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என.	மாகாண ஆளுனரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும்.
(ஆ)	நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நாளதுவரையாக பேணப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பொதுச் சந்தையில் கடை அறை இலக்கம் 27/8 அபிவிருத்தி செய்து வாடகைக்கு கொடுத்தல்		

(i)	கடையறைகளுக்காக டென்டர் அழைக்கும் போது நகரசபை நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி இலக்கம் 314 இன் பிரகாரம் டென்டர் குழுவொன்று மற்றும் மதிப்பாய்வு குழுவொன்று நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் விதி இலக்கம் 327 இன் பிரகாரம் அங்கத்தவர் எவரும் மதிப்பாய்வுக் குழு மற்றும் டென்டர் குழு ஆகிய இரண்டிலும் அங்கத்தவர்களாக இருக்க முடியாத போதிலும் டென்டர் திறத்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல் ஆகிய இரண்டும் ஒரே உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	ஒரு டென்டர் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டமையால் மதிப்பாய்வுக் குழுவிற்கு அனுப்புவதற்கு தேவைப்படாமையால் டென்டரை திறத்தல் மற்றும் டென்டர் தாரரை தெரிவு செய்தல் டென்டர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட என.	நகர சபையின் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ii)	இந்த டென்டர் அழைத்தல் தோல்வியடைந்ததால் சபையினால் கடையறையை இறைச்சிக் கடை ஒன்றாக நவீனமயப்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 575,177 இற்கான தொகை சபைக்கு சிக்கனமற்ற செலவொன்றாக காணப்பட்டது.	விலைமதிப்பீட்டுத் திணைக்களம் கடையறையை கலவை பயன்பாட்டிற்காக ரூபா 5,000 இற்கான மாதாந்த பெறுமதி மதிப்பீட்டு வாடகை கலவை தீர்மானிக்கப்பட்டு பலவின பயன்பாட்டிற்காக 03 வருடங்களுக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டு இருந்ததெனவும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	கடையறைகள் நவீன மயப்படுத்தும் போது மற்றும் டென்டர் அழைக்கும் போது முறையான திட்டமொன்றின் படி மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	சபையினால் 2024 ஆண்டிற்காக 05 வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் பியகம வீதி 4 ஆம் மைல் கல் பொதுக் கழிவறை எதுவித சாத்தியக்கூறு ஆய்வுமின்றி டென்டர் பண்ணுவதற்காக ரூபா 204,884 இற்கான செலவொன்று மேற்கொண்டு செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த ஆதனங்களுக்குரிய டென்டரை செயற்படுத்த முடியாமல் போனமையால் மேற்கூறிய செலவுகள் சபையின் சிக்கனமற்ற செலவொன்றாகியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.	2024 ஆண்டிற்காக வாடகைக்கு எடுத்தவர் சபைக்கு செலுத்தியிருந்த தொகை ரூபா 175,721 தொகை எனவும் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 154,399 ஆகும் என.	டென்டர் அழைக்கும் போது முறையான ஆய்வொன்று மற்றும் திட்டமொன்றின் படி செயற்பட வேண்டும்.
(i)	நகர சபை நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதி இலக்கம் 395 இன் பிரகாரம் ஆதனங்கள் தொடர்பாக விலைகூறலின் பெறுமதியை தீர்மானித்தல் பட்டய பெறுமதி மதிப்பாளர் ஒருவரின் பெறுமதி	விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இந்த பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்காக கணிசமான காலமொன்று எடுப்பதனால் நகர சபையின் வருமான	நகர சபை நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவீடு செய்வதற்காக டெண்டர் பெறுமதி சபை உத்தியோகத்தர் அடங்கிய பெறுமதி மதிப்பீட்டு குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	பரிசோதகரின் மூலம் பெறுமதி மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டது என.	
(ii)	சபையினால் மேற்கூறிய 5 பாதைகளில் வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவீடு செய்வதற்காக டெண்டர் பண்ணுவதற்கு தீர்மானித்திருந்த போதிலும் அதற்கான கட்டணம் அறவீடு செய்யும் இயலுமை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அந்த செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது.	எதிர்காலத்தில் சாத்திக்கூறு ஆய்வொன்று மேற்கொண்டு மீண்டும் இந்த துணைப் பாதைகளை வாடகைக்கு கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என.	முறையான ஆய்வொன்று மற்றும் திட்டமொன்றின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(iii)	கூடிய கூறுவிலை சமர்ப்பித்த டெண்டர்தாரருக்கு டெண்டர் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 05 வாகனத் தரிப்பிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொண்ட நபரினால் 2024 பெப்ரவரி 15 திகதி முதல் டெண்டரை செயற்படுத்தி குறிப்பிட்ட பாதைகளில் வாகனத் தரிப்பிடங்களுக்கான கட்டணம் அறவீடு செய்யப்பட்டு வந்திருந்த போதிலும் சபையுடன் எழுத்துமூல உடன்படிக்கையொன்றிற்கு அணுகியிருக்கவில்லை.	வாகன தரிப்பிடங்களை வாடகைக்கு கொடுக்கும் டெண்டர் 2024 ஜுலை 01 ஆந் திகதி இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	முறையான ஆய்வொன்று மற்றும் திட்டமொன்றின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**		
I.	பராக்கிர மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடத்திலுள்ள வாசிகசாலையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதென கணக்காய்வில் கண்டறியப்பட்டதுடன், அவ்வாறு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விபரங்கள், கோப்புக்கள் மற்றும் சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரம் தொடர்பான விபரங்கள் பேணியிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அது தொடர்பாக கோப்பொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கோப்புக்கள் மற்றும் பதிவேடுகள் முறைப் பிரகாரம் பேணப்பட வேண்டும்.
II.	இந்தக் காணிக்குரிய சபைக்குச் சொந்தமான காணி உறுதி சபையில் காணப்படாததுடன் துணைப் பதிவேடொன்று மாத்திரம் சபையிடன்	காணியில் சபைக்கு உரித்தான பகுதியின் எல்லைகளை இனங்காண்பதற்காக காணி உறுதிகள் தயாரிக்கப்பட்டு	சபைக்குச் சொந்தமான ஆதனங்களை இனங்கண்டு உரிமையை உறுதிப்படுத்திக்

	காணப்பட்டது. காணியின் சபைக்கு உரித்தான பகுதியை இனங்காண்பதற்காக எல்லைகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலவரைபடத்தின் படி எல்லைகள் ஒதுக்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என.	கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான 328.61 சதுரடிக்கான மீகஹவத்த வாசிகசாலை மற்றும் 373.37 சதுரடிக்கான தரமடுவ வத்த வாசிகசாலை குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. மீகஹவத்த வாசிகசாலை காணி எல்லைகளை கண்டறிய முடியாமல் உள்ளதுடன் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது மூடப்பட்டிருந்த கட்டிடங்களின் மிருகங்களும் தங்கியிருப்பது அவதானிக்கப்பட்டது.	புதிய சபை நியமனம் செய்யப்பட்ட பின்னர் அவ்வாறான இடங்களை ஆக்கபூர்வமாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	ஆதனங்களை ஆக்கபூர்வமாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	**வருடாந்த பண்டக் கணிப்பீடு**		
	நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 90 காணிகள் காணப்பட்ட போதிலும் அந்தக் காணிகளில் 74 காணிகளுக்காக காணி உறுதிகளும் 28 காணிகளுக்காக நில அளவைப் படங்களும் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	காணிகளுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் நகர சபைக்கு சொந்தமான ஆதனங்களின் காணி உறுதிகள் தயாரிப்பதற்கு களனிப் பிரதேச செயலாளருக்கு அனுப்பட்டுள்ளது என.	சபைக்கு சொந்தமான ஆதனங்களை இனங்கண்டு உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	கணிப்பீட்டு அறிக்கையின் படி 2018 ஜனவரி 01 திகதி முதல் பழைய அங்கத்தவர்களினால் ரூபா 8,315 தொகை பெறுமதியான 25 புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டு இருந்ததுடன் பல வருடங்கள் கழிந்திருந்த போதிலும் அந்த புத்தகங்களை திருப்ப நூலகத்திற்கு பெற்றுக்கொண்டிருக்கவில்லை.	03 நினைவூட்டல் கடிதங்கள் வாசகர்களுக்கு மற்றும் பிணையாளர்களுக்கு அனுப்பபட்டுள்ளது என.	வாசகர்கள் அல்லது பிணையாளர்களிடம் நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும்.
(உ)	அக்குருபிடிய வாசிகசாலையின் 2024 நூலகப் புத்தக கணிப்பீட்டு அறிக்கையின் படி ரூபா 20,054 தொகை பெறுமதியான 53 புத்தகங்களும் பெறுமதிகள் குறிப்பிடப்படாத 03 புத்தகங்களும் காணாமல் போயிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன், அந்த புத்தகங்களின் நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	14 புத்தகங்கள் தொடர்பாக நூலக ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு அதன்படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஊ)	முருகன்வத்த வாசிகசாலையில் 2024 இன் நூலகப் புத்தக கணிப்பீட்டு அறிக்கையின் படி ரூபா 1,855	07 புத்தகங்கள் தொடர்பாக நூலக ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	பெறுமதியான 09 புத்தகங்கள் காணாமல் போயிருந்ததென அவதானிக்கப்பட்டது.	அதன்படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	
(எ)	**உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**		
	2013 ஜனவரி 19 ஆந் திகதி உள்ளுராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த டொயோடா ஹய்லுக்ஸ் வகையைச் சேர்ந்த ரூபா 3,178,227 தொகை பெறுமதியான கெப் வண்டியை சபையின் பெயருக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உள்ளுராட்சி ஆணையாளர் (மே.மா) இற்கும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை பதிவுசெய்தல் சான்றிதழ் கிடைத்திருக்கவில்லை என.	சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 ஒப்பந்த நிருவாகத்தில் பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையினால் 3 கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த நகர சபை வளாகத்தின் பின்பக்கமாக வாகன தரிப்பிடமொன்று தயாரிப்பதற்கான செயற்திட்டமொன்றிற்காக 03 கோப்புக்கள் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைக்கான குழுத் தீர்மானங்கள், பெறுகை முறை, தெரிவு செய்யப்பட்ட முறை, அதற்கான எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரதிகள் குறிப்பிட்ட கோப்புக்களில் கண்டறிவதற்கு முடியாமல் இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.	குறிப்பிட்ட செயற்திட்டம் தொடர்பான தீர்மானங்களின் பிரதிகள் கோப்பிடப்பட்டுள்ளது என.	கோப்புக்கள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும்.
I.	2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2 இன் பிரகாரம் மேற்கூறிய செயற்திட்டத்திற்குரிய பெறுகை செய்முறையில் கட்டங்களை காட்டக்கூடிய பெறுகை நேரசூசி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	பெறுகை நேரசூசி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என.	பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
II.	மகளிர் விவசாய அமைப்பொன்றினால் இந்த செயற்திட்டத்தின் முதலாம் கட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்டதென வழங்கியிருந்த திகதி குறிப்பிடப்படாத கடிதம் 2024 ஜனவரி 26 ஆந் திகதி கிடைத்திருந்தது. உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலை விபரங்கள் மற்றும் வரைபுகள் விதிமுறைகளின் படி நிர்மாண வேலை உரிய முறையில் நிறைவேற்றப்பட்டது என வேலை அத்தியட்சகர்/ தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் சபையின் செயலாளரின் சான்றிதழ் ஒன்றின்றி பில் பத்திரங்களை பரிசோதனை செய்தல் மற்றும் கொடுப்பனவு குழுவின்	எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்காக பொறுப்பாக இருக்கப்படும் என.	நிலவுகின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் படி செயற்பட வேண்டும்.

	பரிந்துரையொன்றின்றி 2024 ஜனவரி 26 ஆந் திகதி ரூபா 1,794,698 தொகை அந்த சமூக அமைப்பிற்காக செலுத்தப்பட்டிருந்தது.		
III.	சபையினால் முதலாவது கட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வேலையென மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வேலைகளில் இரண்டு விடயங்களுக்குரிய வேலைகள் திட்டமிட்டவாறு மேற்கொள்ளப்படாமல் மாற்று செய்முறைகளின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தமையால் மதிப்பீட்டுப் பெறுமதியை விட ரூபா 174,578 தொகை மிகையாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.	மதிப்பீடுகள் தயாரிக்கும் போது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட விடயங்களுக்கு பதிலாக வேறு விடயங்கள் பயன்படுத்தப்பட்டது என.	முரண்கள் குறையக் கூடியவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.
IV.	முதலாவது கட்டத்தின் கீழ் ரூபா 555,055 தொகைக்கான மேதிகவேலை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த கருமத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் இடப் பரிசோதனை மேற்கொள்ளல் மற்றும் சுற்றாடல் பகுப்பாய்வொன்று மேற்கொள்வதன் மூலம் ஏற்கனவே இனங்காணக் கூடியதாக இருந்த விடமொன்றாக இருந்தமையால் அந்த வேலைக்கான மதிப்பீடு செய்திருக்காமை ஒப்பந்த நிருவாகத்தில் பலவீனமொன்றென அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் இயன்றளவு குறைபாடுகளை சரி செய்வதற்கு முயற்சி செய்யப்படும் என.	முரண்கள் குறையக் கூடியவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.
V.	அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.3 பிரகாரம் ஒப்பந்த முரண்கள் மதிப்பீட்டு ஏற்பாட்டுத் தொகையில் 10 சதவீதத்தை மிகைக்கக் கூடாதிருந்த போதிலும் மேலே முதலாம் கட்டத்தின் மேலதிக வேலைகளுக்கான கொடுப்பனவுகள் 29 சதவீதமாகக் காணப்பட்டது.	மதிப்பீட்டுத் தொகையை மிகைக்காதவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது என.	முரண்கள் குறையக் கூடியவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும்.
VI.	இரண்டாம் கட்டத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது மதிப்பீடு செய்யப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 195,192 இற்கான இரண்டு கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், மேலதிக மற்றும் மிகை வேலைகள் என கூட்டுப்பெறுமதி ரூபா 597,857 இற்கான மூன்று விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தது.	செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது காணப்படுகின்ற அளவையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.	மதிப்பீடுகள் தயாரித்தல் தத்ரூபமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
VII.	செயற்திட்டம் ஒன்றிற்காக மதிப்பீடொன்று தயாரிக்கும் போது தத்ரூபமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாமையால் மதிப்பீட்டிற்கு புறம்பாக கருமங்களை நிறைவேற்றுவதற்கு நேரிடுவதனால் ரூபா 402,655 இற்கான பெறுமதியொன்று சபைக்கு செலுத்த நேரிட்டிருந்தது.	செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது காணப்படுகின்ற அளவை செய்யப்பட்ட அளவுக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.	மதிப்பீடுகள் தயாரித்தல் தத்ரூபமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ)	வணக்கத்துக்குரிய மேதானந்த பிக்கு முன்பள்ளிக் கட்டிடத்திற்கு பகுதியொன்று சேர்ப்பதற்கான செயற்திட்டமொன்றிற்காக உள்ளூராட்சி சேவையின் கீழ் 2023 பெப்ரவரி 06 திகதி உள்ளூராட்சி, பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மற்றும் வலுச்சக்தி , சுற்றாடல் அலுவல்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சு (மேல் மாகாண) கீழ் ரூபா 5,000,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2023 ஆகஸ்ட் 15 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 பெப்ரவரி 06 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தின் நிர்மாண வேலைக்காக உடன்படிக்கைகள் கைச்சாத்திடல் 2023 ஜூலை 31 திகதி அதாவது அங்கீகரிக்கப்பட்டிருந்த நாள் முதல் 5 மாதங்கள் தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
I.	மேற்கூறிய செயற்திட்டத்தின் 13 செயற்திட்ட வேலை விடயங்கள் அதாவது ரூபா 813,122 தொகை நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், நிறைவேற்றப்பட்டிருந்த 21 வேலை விடயங்கள் அதாவது ரூபா 373,886 இற்கான மதிப்பிடப்பட்ட வேலை விடயங்களை விட குறைவாக நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் படி நிறைவேற்றப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 1,187,008 தொகைக்கான அதாவது மதிப்பீட்டுப் பெறுமதியின் 26 சதவீதமாகக் காணப்பட்டது.	சில விடயங்கள் மதிப்பீடுகள் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காணப்படுகின்ற காரணங்களின் அடிப்படையில் இந்த விடயங்கள் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த விடயங்களுக்குப் பதிலாக அதற்குச் சமனான செயற்பாடுகள் அந்த சந்தர்ப்பத்திலேயே மேற்கொள்ள நேரிட்டது என.	மதிப்பீடுகள் தயாரித்தல் தத்ரூபமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
II.	சபையினால் சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்காமையால் மதிப்பிடப்பட்ட வேலை எண்ணிக்கையை விட 24 வேலை விடயங்களின் எண்ணிக்கை அதிகரித்த காரணத்தினால் மதிப்பீட்டு பெறுமதியை விடய ரூபா 535,965 இற்கான தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.	மதிப்பீட்டிற்கு ஏற்ப மேற்கொள்ள முடியாத கருமங்களை மாற்றும் போது கூறுவிலைகள் குறைந்து விடயங்களின் கூட்டுத் தொகையில் இந்த செயற்திட்டத்திற்குரிய மேற்கொள்ள வேண்டிய மேலதிக கருமங்கள் நிறைவேற்றப்பட்டது என.	மதிப்பீடுகள் தயாரித்தல் தத்ரூபமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	2021 ஆண்டின் போது சபையினால் வரவேற்புக்கூடம் எனப் பயன்படுத்துவதற்காக 4 மாடியைக்	வரவேற்புக்கூடம் நிர்மாணிப்பதற்காக சாத்தியக்கூறு ஆய்வொன்று	சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டும்.

	கொண் கட்டிடமொன்று பேலியகொட பழைய கண்டிப் பாதையில் 50 ஆம் இலக்க இடத்தில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதன் படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உசாத்துணை சேவைகள் நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆரம்ப கருமங்கள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 28,026,307 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 2022 ஆண்டின் போது அந்த செயற்திட்டம் நிறுத்தப்பட்ட காரணத்தினால் சபையினால் ஒப்பந்த வேலை கம்பனியில் இருந்து ரூபா 19,940,985 தொகை மாத்திரம் திருப்ப அறவீடு செய்வதற்கு இயலுமாக இருந்தமையால் ரூபா 8,085,322 தொகையொன்று சபை இழந்திருந்தது.	மேற்கொண்டிருக்கவில்லை என.	அவ்வாறின்றிய செயற்திட்டங்களை அங்கீகரித்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	சமூக அமைப்பொன்றில் இருந்து அமைப்பொன்றிற்கு கிடைக்கக் கூடிய ஒப்பந்த சங்கம் ஒன்றுடன் தொடர்பு ஒன்றின்றி வெளித்தரப்பினரக்களுக்கு வழங்கப்படுகின்றது எனவும், 5 சங்கங்களுக்கு கிடைக்கக் கூடிய ஒப்பந்த வேலைகள் ஒரே வெளி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படுகின்றது என கணக்காய்வில் கண்டறியப்பட்டது. அதன்படி சபையின் செயற்திட்டங்களை குறிப்பிட்ட காலவரையறையுள் பூர்த்தி செய்ய முடியாமையால் காலநீடிப்பு செய்தல் ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.	நகர சபை உடன்படிக்கை மேற்கொள்ளல் சமூக அடிப்படையில் அமைப்புக்களுடன் மாத்திரம் எனவும் உப ஒப்பந்த வேலைகள் வழங்கப்படுவதில்லை என குறிப்பிடப்பட்டு கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என.	சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(உ)	திறைசேரிச் செயலாளரின் 2021 செப்தெம்பர் 29 ஆந் திகதிய PED/PMD/Cir/2021/01 அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 2.2 இன் பிரகாரம் சமூக அடிப்படைச் சங்கங்களுக்கு வழங்கக் கூடிய ஒப்பந்த வேலைகளின் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 05 மில்லியன் என சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் சபையினால் ரூபா 05 மில்லியனுக்கு மிகைத்து மகளிர் விவசாய அமைப்பிற்கு 06 சந்தர்ப்பங்களிலும் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் ஒன்றிற்கு 03 சந்தர்ப்பங்களிலும் நேரடி அடிப்படையில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது.	ஒரே தடவையில் 03 செயற்திட்டங்களுக்கு மிகையாக உடன்படிக்கை மேற்கொண்டு வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 18 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 31 வெற்றிடங்கள் காணப்பட்டது. பல வருட காலமாக அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப தர பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2001 ஆகஸ்ட் 22 திகதிய மற்றும் 18/2001 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி 05 வருடங்களுக்கு ஒரு முறை பதவியணி இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 09 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் 06 வருடங்களுக்கும் 11 இற்கும் இடைப்பட்ட காலமும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் 06 வருடங்கள் முதலும், வருமானப் பரிசோதகர் உத்தியோகத்தர் 09 வருடங்கள் முதலும் இடமாற்றம் பெற்றுக் கொள்ளாமல் சபையில் கடமையாற்றி இருந்தது.	இடமாற்றம் பெற்றுள்ள உத்தியோகத்தர் இருவரில் ஒருவர் பதில் உத்தியோகத்தர் வராமையால் மற்றும் சேவையின் தேவைப்பாட்டின் காரணமாக தற்போது சபையில் கடமையாற்றுகின்றனர் என.	சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(இ)	2024 ஆண்டிற்காக மனிதவளப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 13 இற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் நான்கு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. பயிற்சி வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் பெறுமதி ரூபா 1,105,200 தொகையாகக் காணப்பட்டதுடன், செலவிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 646,774 தொகையாகக் காணப்பட்டது.	அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நிர்மாண வேலை அலுவல்கள் தொடர்பாக பயிற்சி வழங்கள் பிரஜைகள் சாசனம் தொடர்பான பயிற்சி எதிர்காலத்தில் நடாத்தப்படும் என.	திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
கூட்டுத்தொகை ரூபா 54,070,000 தொகைக்காக 20 சந்தர்ப்பங்களில் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மற்றும் ஏனைய செலவுத் தலைப்புகளிலிருந்து மாற்றப்பட்டிருந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அதன்படி பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	அடுத்த நிதியாண்டுகளில் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து தத்ரூபமாக பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட வேண்டும்.